දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாயா" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ED/9/40/1/1/5

දිනය / திகதி / Date 2017.08. 10

சுற்றறிக்கை இலக்கம் :- 31/2017

சகல மாகாணப் பிரதம செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
பரீட்சை ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அரச மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார்/ உதவி நன்கொடைபெறும் விசேட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பாடசாலை முகாமையாளர்கள்,
சகல பிரிவெனாப் பொறுப்பாளர்கள்,

**இலங்கை பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் உள்நாட்டுப் பாடநெறியினைத் தொடர்வதற்காக கற்கை விடுமுறையினை வழங்குதல்.**

இலங்கை பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் பாடநெறிகளை முழுநேரம் அல்லது பகுதிநேரம் தொடர்வதற்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் 26/2013 சுற்றறிக்களை கீழ்க் குறிப்பிட்டவாறு மறுசீரமைக்கிறேன்.

கற்கை விடுமுறையினைப் பெறுவதற்கு தகைமைபெறும் உத்தியோகத்தர் என்பது உரிய மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 1.4 வாசகம் "அரச பாடசாலைகள், அரச அங்கீகரிக்கப்பட்ட பிரிவெனாக்கள், தனியார் பாடசாலைகள் மற்றும் விசேட உதவி நன்கொடைபெறும் தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்கள் உட்பட கல்வித் துறைக்குரிய கல்விப் பணியாளர் சபைக்காக அவர்களின் தொழில்சார் தேவைக்கமைய உரிய பாடநெறிகளுக்கு தாபன விதிக்கோவைக்கமைய கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும்" என மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றறிக்கையில் 2.5 வாசகத்தில் உரிய கற்கை விடுமுறையினை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கும் முறை என்பது "அரச அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை என்று" அரச அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை மற்றும் உதவி நன்கொடைபெறும் விசேட பாடசாலை எனவும் அதனை பரிந்துரை செய்யும் அதிகாரம் பாடசாலை முகாமையாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அங்கீகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு பொறுப்பளிக்கக் கூடியவாறும்,

4 வது வாசகத்தில் "வார இறுதிப் பாடநெறிக்காக வழங்கப்படும் கடமைபொருட்டு விடுமுறை" என்ற 4.3 வாசகம் "பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பாடநெறி (வார இறுதி), பட்டப்பின் பட்ட விசேட தேவைகொண்ட கல்வி டிப்ளோமா (வார இறுதி) தொடரும் பாடசாலையில் சேவையாற்றும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் இலங்கை கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு அப் பாடநெறியின் பிரயோக கற்பித்தல் கட்டத்திற்காக பத்து வாரங்கள் (10) கற்கை விடுமுறை உரித்தாகின்றது என்பது மறுசீரமைக்கப்பட வேண்டும்.

அத்துடன் இச் சுற்றறிக்கைக்குரிய உப ஆவணத்தில்,

இலக்கம் 2 வாசகம், கல்வி அல்லது கல்வி நிருவாகம் தொடர்பான கல்வி தத்துவமாணி, கல்வி முதுமாணி (விசேட தேவைக் கல்வி) மற்றும் சமமான அல்லது அதற்கு உயர் மட்டக் கற்கை தொடர்பான பட்டப்பின் பட்ட பாடநெறி என்றும்,

இலக்கம் 4 வாசகத்தில் முதலாவது பட்டப் பாடநெறி என்பதின் கீழ் 4.1 வாசகத்தின் கல்விமாணி பட்டப் பாடநெறி (தேசிய கல்வி நிறுவகம்/ பல்கலைக்கழகம்) மற்றும் கல்விமாணி/ கல்வித் தத்துவமாணி (விசேட தேவைக் கல்வி/ உள்ளீட்டுக் கல்வி) தேசிய கல்வி நிறுவகம்/ திறந்த பல்கலைக்கழகம் என்றும்,

5 வது வாசகத்தில் "கல்வித் துறைக்காக பயன்மிக்க பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறி என்பது" 5.1 வாசகத்தின் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா மற்றும் பட்டப்பின் பட்ட (விசேட தேவைகொண்ட கல்வி) டிப்ளோமா எனவும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

**சுனில் ஹெட்டிஆரச்சி**
செயலாளர்
கல்விச அமைசசு

**பிரதிகள்**

01. அரச அங்கீகரிக்கப்பட்ட சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்கள்
02. கணக்காய்வாளர்
03. மாகாண ஆளுநரின் செயலாளர்கள்
04. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
05. கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள்
06. பிரதம ஆணையாளர், ஆசிரியர் கல்வி
07. கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர்கள்
08. கணக்காளர்கள்
09. தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்
10. ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்